**வல்வெட்டித்துறை நகரசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 20 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வல்வெட்டித்துறை நகரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,640,500 பெறுமதியுடைய 06 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காததுடன், அவற்றின் பெறுமதிகளை கணக்குக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) நன்கொடையாக வழங்கப்பட்ட 02 வாகனங்களின் பெறுமதி இறுதிக் கணக்கில் எடுக்கப்பட்டிருக்காமையினால் வாகனங்களின் பெறுமதி குறைத்து காட்டப்பட்டுள்ளது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் சந்தர்ப்பங்களில் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) நகரசபை ஒழுங்கு விதி** | |
| அத்தியாயம் III பிரிவு 54(2) | ஆதனவரி அறவீடுகள் சம்பந்தமாக அவ்வவ் காலப்பகுதியில் அறவீடு மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) நகரசபைகள் கட்டளைச்சட்டம் | |
| பிரிவு 44(2) | நகர சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு 3 வருடங்களுக்குள் சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 15,890 தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 19,831,328 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 8,899,309 தொகை ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 10,932,019 ஆல் அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

**2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 158,109 ஆக இருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொப்பான முன்னைய ஆண்டின் தேறிய மிகையாக ரூபா 34,036 ஆக இருந்தது. மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 124,073 ஆல் அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

**2.3 தொழிற்படுமூலதன முகாமைத்துவம்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படுமூலதனம் ரூபா 90,996,201 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படுமூலதனம் ரூபா 76,242,094 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தொழிற்படுமூலதனம் ரூபா 14,754,107 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.4 வருமான நிர்வாகம்

### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| இறைகளும் வரிகளும் | 800 | 767 | 4,782 |
| குத்தகை வாடகைகள் | 4,680 | 14,159 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 835 | 703 | - |
| ஏனைய வருமானங்கள் | 47,476 | 46,650 | 27,388 |
| **மொத்தம்** | **53,791** | **62,279** | **32,170** |

### 2.4.2 ஆதனவரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆதனவரி மீள மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் ஆதனவரி அறவீடு குறைவாக காணப்படுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆதன வரி நிலுவையாக ரூபா 4,782,089 காணப்படுகின்றது.

### 2.4.3 கடை வாடகை

சந்தைக்கட்டிட தொகுதியில் 11 கடைகளும் திறந்த மண்டபமும் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்காமையினால் நகரசபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

### 2.4.4 ஏனைய வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** சபைக்கு உரித்தான உள்ள 05 மயானங்களிற்கு மயானவரி சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்படவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 14,382,845 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** ஒரு பூங்காவை அமைப்பதற்காக 28.06.2013 ம் திகதிய சபைத் தீர்மானத்தின்படி குத்தகைக்குக் காணி ஒன்று பெறப்பட்டு இன்றுவரை இப்பூங்கா அமைக்கப்படாததுடன் ரூபா 239,040 குத்தகையும் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு பயன்பாடற்ற செலவினமாகும்.

**(ஆ)** சபையில் 84 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 81 பதவியினரே கடமையாற்றுகின்றனர். 03 பதவியினர் பற்றாக்குறையாகவும் 02 பதவியினர் மேலதிகமாகவும் உள்ளனர்.

**(இ)** ஒவ்வோராண்டும் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் 03 கணக்காய்வு முகாமைத்துவக்குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றுள்ளது.

**(ஈ)** பொருட்பதிவேட்டில் 08 உழவு இயந்திரப் பெட்டிகள் மீதியாக காட்டப்பட்டிருந்த போதும் பௌதீக ரீதியாக 07 உழவு இயந்திரப் பெட்டிகள் மட்டுமே காணப்படுகின்றது. இந்த குறைவு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 குறைப்பயன்பாடுள்ள சொத்துக்கள்**

சபையின் 03 வாகனங்கள் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 7,500,000 பெறுமதியான 03 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டுள்ளன.

**3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் முறைசாரா விதமாக திறந்த நிலையில் எரிக்கப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 1,849 தொடக்கம் ரூபா 3,197,565 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) வாகன பயன்பாடு
(ஆ) பாதீடு
(இ) வருமான சேகரிப்பு
(ஈ) சில்லறைக் கடனாளிகள்
(உ) மின்சார பொருட் பதிவேடு
(ஊ) இருப்புப் பதிவேடு
(எ) காணி விற்பனை வரிப் பதிவேடு